Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 42 — No. 6

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 42 | சௌமிய ஆனி 1969 ஜூன் | இதழ் 6

உள்ளுறை பக்கம்

சங்கரரும் அரசாங்கமும் ... 169
குண்டையூர் ... 178
அப்பரும் அப்பூதியாரும் ... 175
“இரண்டு மிஷி” ... 188
சைவத்தின் சீர்மை ... 195

இதழாசிரியர் : மு. அருணசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமரகுருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 29-6-69 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு முதலியனபற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர்.

(செயலாளர்)

ருக்மணி குக்கர் திருவாளர் அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களால் நிறுவப்பெற்ற சைவசித்தாந்த மகா சமாஜக் கட்டடப்பொறுப்புக் குழுவின் சார்பில் 15-5-69 முதல் 19-5-69 முடிய ஐந்து நாள்கள் மாலை 6 முதல் 8 வரை திருமயிலை கபாலீச்சரத்தில் தக்க ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு மழை வேட்டல் தேவாரத் திருப்பதிகள் கள் ஓதப்பெற்றன.

நம் சமாஜச் சார்பில் ருக்மணி குக்கர் திருவாளர் அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் ஆதரவில் 1—6—69, 2-6-69 ஆம் நாள்களில் திரு. கொ. நீ. சிங்காரவேலு எம்.ஏ. அவர்கள் "அப்பர்" பற்றியும் திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ., பி. டி. அவர்கள் "சம்பந்தர்" என்பது பற்றியும் முறையே விரிவுரையாற்றினர். 3-6-69 அன்று சேக்கிழார் பற்றி வித்துவான் திரு. வை. மு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினர். இவை திருமயிலைக் கபாலீச்சுரத்தில் சிறப்புற நிகழ்ந்தன.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 42	சௌமிய ஞூ ஆனி 1969 ஜூன்	இதழ் 6

சங்கரரும் அரசாங்கமும்

(ஆசிரியர்)

சைவ சமயம் அனாதியானது; அதை அங்கமாகக் கொண்ட இந்து சமயமும் அனாதியானது. இந்து சமயம் உலகத்தில் உள்ள சிறப்பான சமய முன்னேற்றக் கருத்துக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டது. இதன் முக்கியமான கொள்கைகளில் ஒன்று, ஆண்டவன் படைப்புக்களில் அனைவரும் சமம், பிறப்பினால் ஆன்மாவுக்கு உயர்வு தாழ்வு இல்லை என்பது. ஆனால் எப்படியோ சில போலிக்கருத்துக்கள் இந்து சமயத்தில் இடையில் வந்து புகுந்து விட்டன. அவற்றுள் ஒன்று தீண்டாமை என்பது. பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்பது ஒரு குப்பான கருத்து. சமயப் பெரியார்களின் வரலாறுகள் இத்தவற்றை நன்கு விளக்குகின்றன. நந்தனார், திருப்பாணாழ்வார், சங்கரர் ஆகியோர் வாழ்க்கை வரலாறுகள் ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை நிரூபிக்கின்றன. நம்முடைய காலத்தில் மகாத்மா காந்தி இதற்கு என்றே தம்முடைய வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்டார். தீண்டாமையை ஒழிப்பதற்தற்காகப் பல இயக்கங்கள் நடத்தினார். அந்த இயக்கங்களின் விளைவாக முதலில் தமிழ் நாட்டிலும் பிறகு இந்தியா

முழுவதிலும், தீண்டாமை ஒழிப்புச் சட்டமே ஏற்பட்டது. பொது வாழ்க்கையில் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்ட விரோதமாகும். இது அரசியல் நிலைமை.

நிலைமை இப்படியிருக்க, பூரி சங்கராச்சாரியார் என்ற சமயப் பெரியார் தீண்டாமை இந்து சமயத்தில் உள்ளது என்று பேசியதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அவர் மீது நடவடிக்கை நடத்த வேண்டும் என்று கிளர்ச்சி எழுந்தது. அதன்மேல் இந்திய அரசாங்கம், அவர் மீது நடவடிக்கை நடத்துமாறு சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்துக்குக் கட்டளை பிறப்பித்தது என்றும் செய்தி வந்தது. இதுபற்றி சைவ மக்களாகிய நாம் சில கருத்துக்களை மனத்தில் கொள்வது நல்லது.

முதலாவதாக, சங்கராச்சாரியார் வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவருடைய வேதாந்தத்தில் தீண்டாமைக்கு இடமில்லை என்பதைக் காட்டுகின்ற வரலாறு தெரிகின்றது. காசி நகரத்தில் அவர் சென்று கொண்டிருந்தபோது, ஒரு நாள் எதிரில் வந்து கொண்டிருந்த சண்டாளனை நோக்கி "விலகிப்போ" என்று சொன்னாராம். அபபோது அந்தச் சண்டாளன், "யாரைச் சொல்கின்றீர்" என்று கேட்டான். அந்தக்கணமே அவருக்கு அறிவு உண்டாகி "என்னுடைய புத்தியும் தடுமாறிப் போய்விட்டதே" என்று சொல்லி வருந்தி அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டாராம்.

இதன் பொருளாவது, "நீர் நிலை நாட்டியிருக்கின்ற அத்வைத சமயத்தில் பிரமம் ஒன்றுதானே உண்டு? நான் நீ என்பதெல்லாம் மாயைதானே? சண்டாளத்துவம் எதற்கு உண்டு? மண்ணாலாகிய சரீரத்திற்கா? பிரமமாகிய ஆத்மாவுக்கா?'? என்பது சண்டாளன் கேட்ட கேள்வியின் பொருள். "எல்லாம் ஒன்றே, வேறுபாடாகத் தெரிவதெல்லாம் மாயை என்று நிலை நாட்டிய நீயா இப்படிக் கேட்கிறாய்?" என்பதுதான் அச்சண்டாளன் கூறிய சொற்களின் கருத்து.

இந்த வரலாறுடைய சங்கரரின் மரபில் வந்த ஒரு சங்கராச்சாரியார் இப்படி தீண்டாமை பாராட்டினார் என்பது மிகவும் விபரீதமான வருந்தத்தக்க நிலைமை. இதனால் இந்தச் சமயத் தலைவர்கள் தங்கள் முன்னோரின் வழியில் செல்லவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆதிசங்கரர் ஐந்து இடங்களில் சங்கரமடம் நிறுவினார் என்பது வரலாறு. அவற்றுள் காஞ்சி காமகோடி பீடம் ஒன்று. இது ஒன்றுதான் தமிழ்நாட்டில் உள்ளது. மற்றவை வடநாட்டில் உள்ளன. காலப்போக்கை அனுசரித்து, ஆடம்பரத்தை விரும்பாமல், எளிய முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, நாடெங்கும் சுற்றி, மக்களைத் தெய்வ நெறியில் செலுத்தும் பெரும்பணியில் ஈடுபட்டிருப்பவர் நம்முடைய தமிழ் நாட்டின் சங்கராச்சாரியார். ஏனையோர் ஆடம்பரப் பிரியர்கள்; தமிழ் நாட்டின் ஆசாரியரை மிகவும் குறைகூறியும் வருபவர்கள்.

பூரி சங்கராச்சாரியார் தீண்டாமையைப்பற்றி அவ்வாறு கூறியிருப்பது பெரும் தவறு. தீண்டாமை என்பது இந்து சமயத்தில் ஏற்பட்ட ஒரு மாசு. அது இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவம் அன்று. இப்படி அழுக்கையே அழகு என்று சொல்கின்றவர்கள் சமயத்துக்குப் பெரும் தீங்கு செய்கின்றார்கள்.

ஆனால், இங்கு ஒரு நிலைமையைக் குறிப்பிட வேண்டுகின்றோம். இந்த ஆசாரியர் தீண்டாமைக்கு ஆதரவு கூறியதற்காக, அதாவது சட்ட விரோதமான ஒரு காரியத்தைச் சொன்னதற்காக, ஒரே கூக்குரல். அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க முனைகிறது. இது எவ்வளவு பொருத்தம் என்பதைப் பார்க்க வேண்டும்.

சட்டவிரோதத்தைப் பிரசாரம் செய்கிறவர்களையெல்லாம் அரசாங்கம் கண்டிக்கிறதா, அவர்களைக் கைது செய்கிறதா என்பது கேள்வி. மது விலக்கு என்பது சட்டம். மதுவிலக்கை ஒழிக்க வேண்டும் என்று சொல்கின்றவர் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றதா? பெரும் தலைவர்கள் கூட இப்படி சொல்லிருக்கின்றார்களே?

இந்தியா சமயச்சார்பு அற்ற நாடு, பலதார மணம் சட்ட விரோதமானது. பலதாரமணமே வழக்கமுடைய முஸ்லிம் மக்களிடையே அரசாங்கம் நிர்ப்பந்தமான நடவடிக்கை நடத்துகின்றதா?

குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரால் ஒரு சட்டம். அதாவது அதிகக் குழந்தைகள் பெறக்கூடாது என்பது. கிறித்தவக் கத்தோலிக்கர்கள் எவ்வளவோ மறுத்துப் பேசுகிறார்கள். போப்பும் எதிர்த்து உத்தரவு செய்கிறார். அரசாங்கம் இவர்கள் விஷயத்தில் என்ன கொள்கை கடைப்பிடிக்கிறது?

ஒரு சங்கரர் தீண்டாமைக்கு ஆதரவு கொடுத்தால் போகட்டுமே? பொதுமக்கள் இருக்கிறார்கள்; பார்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் கிளர்ச்சி செய்வார்கள். அரசாங்கம் தலையிடும்படி என்ன குடி முழுகிப்போயிற்று? அரசாங்கம் தலையீட்டுக்கு முக்கியமான அலுவல்கள் இல்லையா?

இந்திய அரசாங்கம், முஸ்லிம்கள் என்றால் அஞ்சுகிறது. கிறித்தவன் என்றால் அஞ்சுகிறது. இந்து என்றால் கேட்பார் இல்லை. இது மிகவும் இழிவான நிலை. இதையொத்த நிலை இந்திய நாட்டில் ஒருபோதும் இருந்ததில்லை.

நாம் தீண்டாமையை ஆதரிக்கிறோம் என்று எண்ணக் கூடாது. இந்து சமயத்தலைவர் ஒருவர்மீது அரசு பாணம் தொடுப்பது தவறு என்பதையே நாம் இங்கு சுட்டிக் காட்டுகின்றோம். சமூகத்தில் தவறான பிரசாரம் செய்கின்றவரைச் சமூகமும் இந்து சமயமும் பார்த்துக்கொள்ளட்டுமென்று தான் விடவேண்டும்.

குண்டையூர்

(மு. அ.)

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நெல் அருளிய தலம். அவருக்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் மிகப்பல. அவற்றுள் இங்கிருந்த நெல்லைப் பூதகணங்களால் எடுப்பித்துத் திருவாரூரில் சேர்த்தார். குண்டையூர்க்கிழார் என்னும் வேளாளர் (காராளர் என்று திருக்கோளிலி உலா கூறும்) பரவை மனைக்கு அமுது செய்ய நெல் அளக்கும் பணி செய்து வந்தார். வானம் முறை வழங்காமையால், வளம் சுருங்கவே, அனுப்புவதற்கு நெல் இன்றிக் கிழார் வருந்தினர். இறைவன் மலைபோல நெல் அளித்தார். அந் நெல் மலையை ஒருவரும் எடுக்க இயலாமை உணர்ந்து. கிழார் சுந்தரரிடம் விண்ணப்பம் செய்தார். அவரும் வந்து நெல்மலையைக் கண்டு, அருகிலுள்ள திருக்கோளிலி சென்று பணிந்து,

"நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப்
பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே"

என்ற பதிகம் பாடி இறைவனைக் குறையிரந்தார். 'பூதங்கள் நெல்லைக் கொண்டு சேர்க்கும்' என அசரீரி எழவே, ஆரூரர் ஆரூர்ப் பரவை மனைக்கு மீண்டார். அன்றிரவு பூதங்கள் நெல்மலையை ஆரூரில் கொண்டு சேர்த்தன. பரவை மனை கொள்ளாமை இருந்தது கண்டு, நம்பியாரூரர், 'இவ்வூரார் தங்கள் மனை எல்லைக்குட்பட்ட நெல்லைத் தாங்களே எடுத்துக் கொள்ளலாம்' என்று அறிவித்து எடுத்துச் செல்லச் செய்தார். இது பெரிய புராணம் கூறும் வரலாறு.

இடம்: கீழ்வேளூர் கைச்சினம் சாலையில் கிளப்பாடு அடைந்து அங்கிருந்து கிழக்கு நோக்கி மூன்று மைலில் திருக்கோளிலி அடைந்து அங்கிருந்து வடக்கே ஒரு மைல் மண்சாலையில் சென்றால் குண்டையூர் அடையலாம். ஊருக்குத்தனியே கோயில் வடபுறத்தில் அமைந்துள்ளது.

பெயர்: குண்டையூர் என்றே வழங்குகிறது. சுவாமி ரிஷபபுரீசர், அம்பிகை மங்களாம்பிகை, தலவிருட்சம் திருவாத்தி. வாயில் புறத்தில் இரு ஆத்தி மரங்கள் உள்ளன. தென்புற ஆத்தியின் கீழ் ,சொக்க நாதரும், வடபுற ஆத்தியின் கீழ் மீனாட்சியம்மையும் எழுந்தருளியுள்ளனர். இவ்விருவரும் எழுநதருளி வந்து கிழாருக்கு நெல் வழங்கிய தாக வரலாறு சொல்வர்.

கோயில்: புதிய கல் திருப்பணி. துப்புரவான வேலை. நந்தி உயரமான பீடத்தின் மீது வெளியே உள்ளார். வாயிலின் உள்ளே நந்தியும் உயரத்தில் ஒருகல் மீது வைக்கப் பட்டுள்ளார். தென்புறம் மடைப்பள்ளி. பிராகாரத்தில் வாயு மூலையில் என்ன காரணத்தாலோ அஸ்திவாரம் உட்கார்ந்து போய் சுவர் பிளந்து கூரையையும் பிளந்து நிற்கிறது. முட்டுக்கொடுக்கப் பட்டுள்ளது. உடனே கவனிக்காவிட்டால் கோயிலுக்கே பேராபத்து. எதிரில் இடப தீர்த்தம்.

மூர்த்தி: சுவாமி சிறிய திருவுருவினர். துவாரத்தில் வலம்புரி விநாயகர் சிறிய துவாரபாலகர் வடிவங்கள். தென் கோட்டத்தில் நிர்த்த கணபதி தக்ஷிணாமூர்த்தி; திரு மாளிகைச் சுற்றில் குண்டையூர் கிழார், பெரிய கணபதி வடிவம், தேவியரோடு முருகன், கஜலஷ்மி பின் கோட்டம் லிங்கோத்பவர் வடக்கில் பிரமன் துர்க்கை சண்டேசர்; அம்பிகை சிறியதிருவுரு; பைரவர்; சூரியன்.

உற்சவர்: நடராசர் அம்பிகை, மாணிக்கவாசகர் சிறியவர், புதிய வடிவங்கள்.

வரலாறு: மேலே சொல்லப்பட்டது. மீனாட்சி சுந்தரேசர், குண்டையூர்க் கிழாருக்கு அருள் புரிய வந்து தங்கிய இடம் சுந்தரபாண்டியம் என்ற பெயருடையதாய் வடக்கே ஒரு மைல் தொலைவில் வெள்ளாற்றின் கரையில் உள்ளது.

பாடல்: மேலே குறிப்பிட்டபடி சுந்தரர் திருக் கோளிலிப் பதிகம் பத்துப் பாடலிலும், குண்டையூர் நெல்லை எடுத்துவர ஆள் வேண்டும் என்று பாடுகிறார். பெரிய புராணததில் ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் 3168–3188 பாடல்களில் இவ்வரலாறு நன்கு விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதும் காணலாம்.

அப்பரும் அப்பூதியாரும்

(வித்துவான் சி. குமாரேச பிள்ளை)

சிவனடியாரையும் சிவபெருமானுகவே மதித்து வழி படுதல் சைவ நெறிகளுள் தலைசிறந்த ஒன்று. சிவனடியாரிடத்துச் சிவபெருமான் உறைதயிரின் கண் நெய்போல விளங்கித் தோன்றுவான் என்பது சாத்திரம்.

> 'தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
> தன்னுணரத் தன்னு ளிருத்தலாற் — தன்னுணரும்
> நேசத்தார் தம்பால நிகழுந் ததிநெய்போல்
> பாசத்தார்க் கின்றும் பதி'.
>
> (சிவஞானபோதம் 12. 3. 1)

வாக்கு மனங்களைக் கடந்து நின்ற பரம்பொருள், உலகத்தார் தம்மையறியும்படி கருணை செய்து, தமது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய வடிவத்தைத் தமதன்பர்களுக்குக் கொடுத்து அவர்களிடமாக நின்று, அவர்கள் தம்மைச் சிவோகம் பாவனையில் உணரச் செய்கின்ருர். அவ்வாறு உணருகின்ற அடியார்களைத் தமது வியாபகத்துள் இருத்துகின்ருர். இவ்வாறு தம்மை உள்ளவாறு உணரும் அடியாரிடத்துச் சிவபெருமான் தயிரின் கண்ணதாகிய நெய்போல விளங்கித் தோன்றுகின்ருர். அத்தகைய அன்பில்லாதவர்களிடத்துப் பாலின் கண்ணதாகிய நெய்போல விளங்காது நிற்கின்ருர்.

பாலில் நெய் அடங்கியிருந்தாலும் வெளிப்படையாக விளங்கி நிற்பதில்லை. அப்பாலைத் தூயவோர் கலத்தில் பெய்து, நீரும் கலந்து காய்ச்சி ஆறவைத்து மோரும் சேர்த்தால் தயிராகும். அத்தயிரில் நெய் மேற்பட்டு விளங்கித் தோன்றும். அதுபோல சிவபெருமான்,

> 'இருநிலனுய்த் தீயாகி நீரும் ஆகி
> இயமான னுயெறியும் காற்று மாகி
> அருநிலைய திங்களாய் ஞாயி ருகி
> ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்

பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர்உருவும தம்உருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்ருகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே'

என்று அப்பரடிகள் அருளியவாறு எங்கணும் கலந்து நின்ருலும், சிவோகம் பாவனையால் சிவபெருமானது அத்தகைய வியாபகத் தன்மையை உணர்ந்து, அவ்வியாபகத்துள் தம்மை இருத்திக் கொண்டு உலகில் உலவுகின்ற மெய்யடியார்க்கன்றி ஏனையோர்க்கு விளங்கித்தோன்ருன். எனவே சிவபெருமான் ஏனையோர்க்கும் தம்மையுணர்த்த வேண்டிக் காய்ச்சிய பாலனைய அத்தகைய மெய்யடியார்களுக்குப் பால்கலன் போன்ற பதித்தன்மை பெற்ற தூய உடம்பினை யருளி, தம் திருவருளாம் நீரினைக் கலப்பித்து, சிவோகம் பாவனையாகிய தீயினை மூட்டி, திருநீறு, திருமணி ஆகிய மோரினையும் சேர்ப்பித்துச் சிவ வியாபகத்துள் உறையச் செய்து அவர்களிடமாக விளங்கித் தோனறுகின்ருன்.

இத்தகைய திரு தம்மிடமாக உறையப் பெற்று, அச் செம்பொருள் தம்மிடம் விளங்க, கந்தை மிகையாம் கருத்தும் கையுழவாரப்படையும், சிந்தை இடையருவன்பும், செம்பொன் தொடையரு திருவாயுமுடையவராய்த் திருவேடம் தாங்கி பார்வாழத் திருத்தொண்டு புரிந்து வந்தவர் திருநாவுக்கரசு பெருமான். அப்பெருமையை உள்ளவாறுணர்ந்து, அப்பெருமானையே சிவமாக வழிபட்டுப் பேறடைந்தவர் அப்பூதியடிகள்.

அப்பூதியடிகளென்பார் எவ்வுயிர்க்கும் தணணளி செய்யும் செம்மைக் குணம் கொண்ட அந்தணர். குலச் செருக்கென்னும் குழியில் விழாதவர். களவு. பொய், கோபம் முதலிய குற்றங்கள் நீங்கியவர். தாண்டவம் புரிகின்ற சிவபெருமானுக்கு அன்பர். சிவாலயத்தொண்டும் சிவனடியார்த் தொண்டும் வழுவாது செய்து மனையறம் நடத்தி வந்தார். அதனுல் இம்மைக்குரிய புகழினையும் பிறவியறுக்கும் எல்லையில் தவத்தினையும் உடையவராய்

விளங்கினர். அத்தவப்பேற்றின் காரணமாக அவர்தம் காலத்திருந்த திருநாவுக்கரசு பெருமானின் திப்பியவரலாறு அவர் செவியில் விழுந்தது. அவர் ஆண்டவனிடம் வைத்திருந்த அகன்ற அனபும், இறைவன் அவருக்குச் சுரந்த இனிய அருளும் அறிந்தார்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதாம்
நட்பாம் கிழமை தரும்'—என்றார் வள்ளுவர்.

இருவர் நட்பிற்கு அவர்கள் நாள்தோறும் கண்டு பழகுதல் வேண்டுமென்பதில்லை; கருத்தால் ஒன்றுபட்டிருத்தலே போதுமென்பது வள்ளுவர் கருத்து. அப்பூதியடிகளும் நாவுக்கரசு பெருமானைக கண்ணால் கண்டவரலலர். கருத்தால் ஒன்றுபட்டார். சிவனருளுணர்ச்சி நாவுக்கரசர் பால் ஈடுபடச் செய்தது. நாவுக்கரசர்பால் விளங்கிய செம்பொருள் விளக்கம். நாவுக்கரசர் பெருமானது அறிவின்றியே சிவனருளால் அப்பூதியடிகள்பால் பாய்ந்தது. ஆகவே அப்பூதியார் அப்பர் பெருமானையே சிவ பெருமானாக எண்ணி வழிபடலானார்.

கண்ணால் காணாத நாவுக்கரசு பெருமானைக் காணும் பொருளிலெல்லாம் கண்டார். தம் வளமனையிலுள்ள அளவைகள், நிறைகோல், பசு எருமை யாவற்றையும் நாவுக்கரசாகக் கண்டார். தம் மக்களுக்கெல்லாம் நாவுக்கரசெனும் திருநாமம் சாற்றி அழைக்கலானார். தண்ணீர்ப் பந்தல், சாலை, குளம் முதலிய முடிவிலாத அறங்கள் செய்து அவற்றிற்கெல்லாம் நாவுக்கரசென்னும் நாமம் சாற்றினார். இவ்வாறு அவரது வழிபாடு மனமொழி மெய்யென்ற மூன்றானும் முறுகி வெளிப்படுவதாயிற்று.

"தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னாருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தஅன் பினரா யுளளார்"

"களவுபொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினர் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக
லாற்றார்"

"வடிவுதாம் காணு ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பி ரானுர் அருளுங்கேட் டவர்நா மத்தால்
படிதிகழ் மடங்கள் தண்ணீர்ப பந்தர்கள் முதலா வுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும்
நாளில்'

என்னும் பாடல்களில் 'கலந்த அன்பு, நாமம்சாற்றும் அவ்வொழுகல், அறங்கள் செய்து" என்னும் தொடர்கள் முறையே அப்பூதியடிகளாரது மனமொழிமெய் வழிபாட்டினை விளக்கி நிற்கின்றன.

இந்நிலையில் அவர் வாழ்க்கை நடத்துங்கால், அவரை முன்னர்க் கேட்டும் அறிந்திராத நாவுக்கரசுபெருமான், சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்துத் திருவையாற்றிற்குக் கிழக்கேயுள்ள திருப்பழனம் வணங்கி அதன் வடக்கு ஒரு மைல் தொலைவிலுள்ள திங்களூர் வழி வந்துகொண்டிருந்தார்: அங்கு ஒரு தண்ணீர்ப் பந்தல்; அருளுடையார் உளமனைய தண்ணளித்தாய், சார்வாரின் தாகம் தீர்ப்பதாய், குளிர்பரப்புடையதாய் விளங்கக் கண்டார். அதில் 'திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தல்' எனும் நாமமும் பொறித்திருக்கக் கண்டார், வியந்தார். "நாவுக்கரசு எனும் நாமம் இறைவனால் தமக்களிக்கப்பட்டது; இன்னும் பலரால் அறியப்படாத ஒன்று; ஆகவே அஃது இன்னொருவர் நாமமாக இருத்தற்கிடமில்லை" எனச் சிந்திக்கலானுர். ஐயமகற்ற அங்கிருந்தாரை நோக்கி' 'இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கமைத்தார் யார்?" என வினவினர் அப்பணியாளர், தம் தலைவரிடம் கொண்டுள்ள மதிப்புக்காரணமாக, 'நமது அப்பூதியடிகளை யாரும் தெரியாதிருக்க முடியாது; ஆகையால் இவரும் தெரிந்திருப்பார். ஆனுல் 'திருநாவுக்கரசர்' என்ற பெயரால் அறங்கள் பல செய்து வருவதை அறியார் போலும்' என்னும் கருத்துடையவராய், "ஐயா! ஆண்ட அரசெனும் பெயரால்' செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்; இதுமட்டு மன்றி தப்பின்றி எங்குமுள சாலை குளம் கா" என்று கூறினர். 'ஆண்ட அரசு' எனும் பெயரைக் கேட்டதும் நாவுக்கரசர் ஐயம் அகன்றது. தம் பெயரை 'இவ்வறச்சாலைகளுக்கு இடும் இவர் கருத்து யாதாயிருக்கலாமென்'னச்

சிந்திக்கலானார். 'ஒரு சிறு பொருள் தருமம் செய்யினும் அதன் வாயிலாகத் தம் பெயரைப் பரப்ப விரும்பும் இயல்புடைய இவ்வுலகத்தில், தம் புகழ் விரும்பாத அறச்செயலாளர் ஒருவரும் இருக்கக்கூடுமோ' என எண்ணினர். அப்பெருமையுடையாரைக் காண விழைந்தார். எனவே மேலும் அப்பணியாளரை நோக்கி 'அவர் எவ்விடத்தார்?' என்றார். அதுபோதுதான் அப்பணியாளர் வந்திருப்பவர் தம் தலைவரைச் சிறிதும் அறியாதவர் என்று எண்ணியவராய் மேலும் வினவிற்கிடமின்றிச் சொற்சுருங்க விடையளிக்கின்றார்.

'துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவுஞ் சேய்த்தன்று நணித்து'

என்றார். தம் தலைவர் அந்தணர் என்பதும், இதே திங்களூரில் பரம்பரையாக வாழ்பவர் என்பதும், இல்லறத்தார் என்பதும், நாள்தோறும் தம் அறங்களைக் கண்காணித்து வருபவர் என்பதும் அவர் உறைவிடம் அணித்து என்பதும், அவர் இல்லம் சென்றால் அவரைக் காணலாம் என்பதும் பெறப்படும்படியாகப் பணியாளர் அளித்த விடை நயம் சுவைத்தின்புறத்தக்கது.

பணியாளர் குறித்த வழியே நாவுக்கரசுபெருமான் அப்பூதியார் இல்லத்தையடைந்தார். அப்பூதியார் வந்திருப்பவர் யாரோ ஒரு சிவனடியார் எனக் கருதி, அடியாரை வணங்குமுறைப்படி நாவுக்கரசர் அடிகளில் விழுந்து வணங்க, நாவுக்கரசரும் அவரடிகளில் விழுந்து வணங்கினார். அவ்வாறு வணங்கியது 'யார் முன்பு வணங்கினர்' என்பது அறியமுடியா திருந்ததென்பதனைச் சேக்கிழார்

'கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியும் அரசு'

எனக் குறிப்பிடுகின்றார். இருவரும் பணிந்தெழ அப்பூதியார் அப்பரை நோக்கி, 'அடிகளே, ஏழையேன் மனைக்கு எழுந்தருளிய தங்களுக்கு அடியேன் செய்யவேண்டுவது யாதோ' என வினவ, அதற்குக் குற்றமற்ற சொல்லை

யுடையவராகிய திருநாவுக்கரசு பெருமான், 'நீங்கள் வைத்து நடத்தும் தண்ணீர்ப்பந்தரைக் கண்டு மகிழ்ந்தேன். அதில் உங்கள் பெயரை எழுதாமல் வேறொருபேர் எழுதக் காரணமென்ன?' என்று வினவினர்.

'வேறொரு பேர்' என்று அடிகள் கூறியது அப்பூதியடிகளுக்குப் பெருஞ்சினத்தை யுண்டாக்கியது. அச்சொல்லைச் சொல்லியவரோ 'கோதில் மொழிக்கொற்றவனர்' என்று சேக்கிழாரால் பாராட்டப்படுகின்ற அப்பர் பெருமான். ஆகவே அவ்வாக்கில் குற்றம் இருக்கதற்கில்லை. பின் அச்சொல் அப்பூதியாருக்குச் சினத்தை யுண்டுபண்ணுவானேன்? சினத்துக்கு ஆளான அப்பூதியடிகள் கூறிய கடுஞ் சொற்களைக் கவனிப்போம்.

"நின்றமறை யவர்கேளா நிலையழிந்த சிந்தையராய்,
நன்றருளிச் செய்திலிர்; நாணிலமண் பதகருடன்
ஒனறிய மன்னவன் சூழ்ச்சித் திருத்தொண்டின்
உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறொருபேர்' என
வெகுள்வார்.

'நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ரும்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்" எனவிளம்பி

'பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர் பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார், யாருளரே!
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர்? நீர்தாம்யார்? இயம்பும்"

என இயம்பினர்.

'நிலையழிந்த சிந்தையர்' என்பது அறிவையழித்து வந்த சினத்தை யுணர்த்தியது. அதன் பயனாக வந்த சுடுசொல், 'நன்றருளிச் செய்திலீர்' என்பது. "சிவனடியாராகிய நீர் நல்லதைச் சொல்ல வேண்டாமா? நீர் நல்லதைச் சொல்லவில்லையே! சமணனாகிய மகேந்திர வர்மன், சமணம் விட்டுச் சைவம் சார்ந்த நாவுக்கரசு பெருமானை

நீற்றறையிலிட்டான்; விடம் அருந்தச் செய்தான்; யானையால் மிதிக்கச் செய்தான். சிவத்தொண்டில் தாம் கொண்டிருந்த உறைப்பு ஒன்றினாலேயே மன்னவன் சூழ்ச்சி அனைத்தையும் வென்றார். எம்போல்வாரும் பிழைப்பதற்கெனவே சைவநெறியைத் தமிழகம் உணரச் செய்து வருகின்றார். அத்தகைய பெருமையுடையவர் பெயரா வேறொரு பேர்?

சிவபெருமான் தம் திருவாக்கால் அருளிச் செய்த நாவுக்கரசெனும் திருப்பெயரோ வேறொரு பேர்? பிறவிப் பிணியறுக்கும் நல்திருநாமமாம் அத்திருப் பெயரோ வேறொருபேர்? இதைவிடக் கொடிய மொழி வேறு என்ன இருக்கின்றது? ஐயா, நீர் மங்கலமிக்க திருவேடத்துடன் நிற்கின்றீர். எனினும் மகேந்திர வர்மன் நாவுக்கரசு பெருமானைக் கல்லோடு சேர்த்துக் கடலிலிட, அப்பெருமான் சொற்றுணை வேதியன், சோதிவானவன் பொற்றுணைத் திருந்தடிகளை உள்ளம் பொருந்தக் கைகூப்பி வணங்கி, கல்லையும் தெப்பமாக்கிக் கரையேறிய பெருமையை யறியவில்லையா? அப்பெருமையாலே மன்னவனும் திருந்த, நாடும் உய்ய வழிவகுத்தாரே! அப்பெருமையை நீர் அறியீரோ? நீர் சைவம் தழைக்கும் தமிழ்த்திரு நாட்டவர்தாமோ? நீர் யார்? இயம்பும்'' என்றார்.

அப்பூதியடிகளின் சினத்தின் உச்ச நிலையும், அதற்கடிப்படையான நாவுக்கரசு பெருமான் மீது கொண்ட பக்தியின் உச்ச நிலையும் இப்பாடல்களிலே தெளிவாகின்றன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அமைந்த, 'வெகுள்வார், விளம்பி, இயம்பினர்' எனும் சொற்கள் சினத்தின் மிகுதியைக் காட்டுகின்றன. 'வெகுள்வார்' என்ற சொல் உள்ளத்தின்கண் மிகச் சினம் கொண்டார் என்பதையும், சினத்தால் கூறியதையே பலகாலும் சொன்னார் என்பதை 'விளம்பி' என்ற சொல்லும், அவ்வாறு சொன்னவற்றை மிக உரத்த குரலில் சொன்னார் என்பதை 'இயம்பி' என்ற சொல்லும் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வளவுசினத்திலும் முறைமை தவறிய சொல் ஒன்றேனும் அவர் நாக்கினின்றும் வந்ததா?

" ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். "

எனும் குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்த அப்பூதியாரின் ஒழுக்க மேம்பாடுதான் என்னே ? 'வேறொருபேர்'—என்று நாவுக்கரசர் பெயரைக் குறிப்பிட்டது, குணமெனும் குன்றேறி நின்ற அப்பூதியாருக்கு அத்துணைச் சினத்தை யெழுப்பியதென்றால் அப்பூதியாருக்கு அப்பர் பெருமானிடம் இருந்த பக்தியின் சிறப்புதான் என்னே !

அப்பூதியாரின் அன்புணர்வு நாவுக்கரசு பெருமானின் உள்ளத்தை உருக்கியது; எனினும் அவரது அரற்றலிலே அஞ்சியவரைப்போல நடித்து, அப்பூதியாரை நோக்கி, "உண்மையறியும் உணர்வில்லாது சமண சமயம் சார்ந்திருக்க, சிவபெருமான் சூலைநோய் தந்து அருள் செய்து ஆட்கொள்ளச் சைவம் சார்ந்துய்ந்த அச்சிறியேன் யானே" என அடக்கமுடன் பதிலிறுத்தார்.

கேட்ட அப்பூதியார் தேடிய வள்ளி காலில் சுற்றியது போலவும், உள்ளத்துணர்வில் ஊறிநின்ற தெய்வம் ஐம்பொறி அளவிலும் எளிவந்தது போலவும் மகிழ்ந்து, இரு கையும் தலைமேல் குவித்து, உரைதடுமாறி, உடம்பெல்லாம் மயிர்ப்புளகம் பொங்க, தரைமிசை விழுந்து இரு பாதங்களையும் தலைமிசைச் சூடிக்கொண்டார். அற்றவர் அருந்தனம் பெற்றாற்போல் மகிழ்ந்தார்; எழுந்தார்; கூத்தாடினார்; பாடினார்; ஓடினார். இல்லாளையும் மக்களையும் அழைத்து வந்தார். மற்றும் சுற்றமெல்லாம் அழைத்து வந்தார். அப்பர் பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கச் செய்தார். திருவடியை விளக்கி அந்நீரை அனைவர் மீதும் தெளித்தார். திருவமுது செய்யும்படி வேண்ட ஆளுடை அரசும் இசைந்தார். அவரமுதுண்ண இசைந்ததனைத் தாமடைந்த பெரும்பேறாகக் கருதினர். அறுசுவைக் கறிவகைகளோடு அமுதுமாக்கி, அமுதுபடைக்க வாழைக் குருத்தறுக்க தம் மூத்த மகனை ஏவினர். அவனும் 'நல்ல தாய்தந்தை ஏவ நானிது செய்யப்பெற்றேன்' என மகிழ்ந்து சென்றான். அப்பூதியாருக்கு மகனாகப்பிறந்ததனாலல்லவா, நாவுக்கரசு பெருமானுக்கு உண்ண இலை

கொணரும் பேறு தனக்குக் கிடைத்ததென மகிழ்ந்தான். தோட்டத்துள் விரைந்தான். வாழைக் குருத்தொன்றைப் பிடித்தறுக்கலானான். அக்குருத்துடனிருந்த வாளரா ஒன்று அக்கையைச் சுற்றிப்பிடித்து அங்கையில் தீண்டிற்று. சுற்றிய பாம்பை உதறிக் கீழே தள்ளி, விடவேகம் தலையேறுமுன் இக்குருத்தைக் கொண்டு சேர்ப்பேனென ஓடினான், ஓடிய வேகத்தால் விடவேகமும் ஒவ்வொன்றாக ஏறிச் சென்றது. இதயத்திலிருந்து புறப்பட்ட இரத்தம் நரம்பு முழுதும் சென்று திரும்பவும் இதயத்தை அடைவது ஒருவேகம். அதற்குரிய கால அளவு 4 விநாழிகை (செகன்று) இரத்தத்துடன் கலந்த விடம் இரத்தத்துடன் சுற்றிவருகிற ஒவ்வொரு வேகத்திலும் ஒவ்வொரு தாதுக்கள் வலியிழக்கும். உமிழ்நீர், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்ற ஏழு தாதுக்களும் முறையே ஒவ்வொரு வேகத்திலும் வலியிழந்து வரும். ஏழாம்வேகம் தலைக்கேற உயிர்ப்பிரியும். ஏழாம் வேகமும் தலைக்கேறியது. இறப்பது உறுதியெனக் கருதினான். இறப்பதன் முன் அடியார் அமுதுண்ண தாம் பெற்ற பேற்றை நிறைவேற்றிவிட எண்ணினான். விரைந்து மனைபுகுந்தான். மனைபுகும்போதே ஏழாம் வேகம் தலைக்கேறியது; கண்ணும் மேனியும் கருகியது; நாகுழறியது; ஆவிமயங்கிற்று. வாழைக் குருத்தைத் தாயின் கையில் கொடுத்துத் தரைமிசை சாய்ந்தான். தாயாரும் கலங்கி உற்றுப்பார்த்து உண்மையுணர்ந்தாள். மகன் இறப்பைவிட தொண்டர் அமுது செய்யாது அகலுவதைப் பெருமிழப்பாகக் கருதினர் அம்மையார். பிறரறியாதவாறு மகனைப் பாயினுள் சுற்றி மறைத்துவைத்தார். அடியாரை அப்பூதியாருடன் சென்று அமுதுண்ண அழைத்தார்.

ஆளுடைஅரசு ஆதனத்திருந்து, திருநீறணிந்து, அப்பூதியாருக்கும் மனைவியாருக்கும் நீறளித்து, 'முன்னால் கண்ட மூத்தசேய் அங்கில்லாதிருப்பதைக் கண்டு, 'மேதகு பூதிசாதக மூத்த சேயையும் அழையும் என்றார். அப்பூதியார் நிகழ்ந்ததைக் கூறாது 'இப்போதிங்குதவான்' என்றார். இறந்துவிட்டானென உண்மையைக் கூறினால் அரசு உண்ணமாட்டார்; உண்மையை மறைத்துப் பொய்

கூறுவதும் தகுதியன்று. ஆகவே பொய்யாகாமலும் உண்மைக்கு மாறுபடாமலும் 'இப்போது இங்கு உதவான்' என்றார். இதனைக் கேட்டதுமே நாவுக்கரசர் உள்ளத்தில் இறையருளால் ஒரு தடுமாற்றம் உண்டாயிற்று. அச்சொல்லில் சூதுளது என உணர்ந்தார். அப்பூதியாரை நோக்கி, 'இவ்வுரை பொறுதென்னுள்ளம்; என் செய்தான்? இங்கு ஏதோ நிகழ்ந்திருக்கின்றது; மெய்விரித்துரையும்.'' என்றார்.

கேட்டஞ்சினர் அப்பூதியார், உண்மையைக் கூறினால் பெரியவர் அமுதுசெய்யாதகன்று விடுவாரே யென அயர்த்தார்; மாதவர் வினவவும் வாய்மை உரையாதிருத்தலும் சீலமல்லவே என எண்ணினர். சிந்தைநொந்து பரிவொடு வணங்கி மைந்தர்க்கு உற்றதை உரைத்தார். செவிமடுத்த அரசு, 'நன்று நீர் புரிந்த வண்ணம்; யாவர் இத்தன்மை செய்வார்.''—என்று கூறி விரைந்து எழுந்தார். சிவபெருமான் திருக்கோயிலின்முன் அம்மகனைக் கொணரச்செய்தார். சிவபெருமான் அருளை வேண்டி

'ஒன்று கொலாமவர் சிந்தை உயர்வரை
யொன்று கொலாம் உயரும் மதிசூடுவார்
ஒன்று கொலாம் மிகுவெண்டலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே?

என்று பாடிய ஒன்றும் பாவில் 'உயரும் மதிசூடுவார்'— என்று அவர் அமிர்த கலையை வாழவைத்த சிருஷ்டியையும் 'வெண்டலைக் கையது' எனக்கூறி சங்காரமாகிய ஒடுக்கத்தினையும் கூறவே முதல் வேகம் இறங்கியது.

இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவர் எய்தின தாமே

என்ற இரண்டாம் பாடலிலே உலகைக் காத்தற்பொருட்டு அம்மையப்பராக எழுந்தருளி திருவடிகாட்டி மான்மழு ஏந்தி நின்ற அருட்கருணையைப் புகழவே இரண்டாம் வேகம் இறங்கிற்று.

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலே
மூன்றுகொ லாங்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே

என்று பாடிய மூன்றும் பாடலிலே, நெற்றிக்கண், சூலம், வில், கணை முப்புரம் எரித்தசெய்கை ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பெருமான் பகைநீக்கியடியாரைக் காக்கும் மறக் கருணையைப் போற்றவே மூன்றும் வேகம் இறங்கிற்று.

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே

என்று பாடிய நான்காம் பாடலிலே ஊர்தியையும் மறையையும் பாடி அறம் வளர்த்த அமைதியை எடுத்துரைக்கவே நான்காம் வேகமும் இறங்கியது.

அஞ்சுகொ லாமவர் ஆடரவின் படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புலன் ஆவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட்டான் கணை
அஞ்சுகொ லாமவர் ஆடின தாமே.

என்று பாடிய அஞ்சாம் பாடலிலே அவர்பால் ஆடிய அரவினைச் சுட்டி குளிர் நீராடிய அஞ்சினையும் குறிப்பிட ஐந்தாம் வேகம் இறங்கிற்று.

ஆறுகொ லாமவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே

எனப் பாடிய ஆறும்பாடலிலே உலகிற்கு ஆறுதலளிக்க வந்த ஆறுமுகனைப் பாடவே ஆறும் வேகமும் இறங்கிற்று.

ஏழுகொ லாமவர் ஊழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாமவர் ஆளு முலகங்கள்
ஏழுகொ லாமிசை யாக்கின தாமே

என்று பாடிய ஏழாம் பாடலிலே, ஊழி, கடல், உலகு, இசை ஆகிய படைப்பினைக்காட்டிப் புனருற்பவம் காட்டிய அளவிலே ஏழாம் வேகமும் இறங்கிற்று.

எட்டுகொ லாமவர் ஈறில் பெருங்குணம்
எட்டுகொ லாமவர் சூடு மினமலர்
எட்டுகொ லாமவர் தோளிணை யாவன
எட்டுகொ லாந்திசை யாக்கின தாமே

எனப்பாடிய எட்டாம் பாடலிலே சிவபெருமானது பரந்த குணத்தினையும், எட்டுத்திக்கும் பரந்த தோளினையும் பாடவே உடல் முழுதும் பரந்த விடத் தன்மை யகன்றது.

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பின் நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே

எனப் பாடிய ஒன்பதாம் பாடலிலே 'வாசல் வகுத்தன' என வாயில் ஒன்பதும் வகுத்துக் காட்டிட ஒன்பான் வாயி லுடம்பு நலம் முழுதும் கைவரப்பெற்றான்.

பத்துகொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துகொ லாமெயி றும்நெரிந் தூக்கன
பத்துகொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துகொ லாமடி யார்செய்கை தானே.

எனப் பாடிய பத்தாம் பாடலிலே பாம்பின் கண், பல் நெரிந்ததைக் கூறவே பாம்பின் பார்வைத் தோடம் கடிக் கூறு அத்தனையும் நீங்கப்பெற்று, உறக்கம் நீங்கி எழுவா னைப்போன்று எழுந்தான். நாவுக்கரசர் திருநீறளித்தார். பிள்ளையைக் கண்டாரெல்லாம் அப்பரின் திருத்தொண் டின் சிறப்பினைப் போற்றினார்கள் ஆனால் பெற்றோர் களோ. 'அறிவரும் பெருமை அன்பர் அமுது செய்தருளு தற்குச் சிறிதிடையூறு செய்தானிவன்' என்று சிந்தை நொந்தார். என்னே அப்பூதியாருக்கு அப்பர்பால் இருந்த அன்பு.

அப்பூதியார் வாட்டத்தினை யறிந்து அப்பர் அமுத செய்ய எழுந்தார். முன் மகன் அறுத்துக்கொணர்ந்த

அக்குருத்தினையே விரித்திட்டு அமுதுபடைத்தனர். அம்மையார் பரிமாற அப்பூதியாரும் மக்களும் உடனிருந்து உண்டனர். பலநாள் மகிழ்ந்துறைந்தார். பின் அங்கிருந்து திருப்பழனம் சென்றனர். அங்கு இறைவனை நோக்கி, கூடிப்பிரிந்த தலைமகனை நினைந்து புலந்துரைத்த கூற்றாக அகப்பொருள் துறையில்

('சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ'

என்றும்)

'வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதிக்
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே'

என்றும் அப்பூதியாரைச் சிறப்பித்துப் பாடினார். அப்பூதியாரும் அப்பர் பாடலிலே இடம்பெற்றார். திருத்தொண்டத் தொகைபாடிய நம்பியாண்டார் நம்பிகள்

"தனமா வதுதிரு நாவுக் கரசின் சரண மென்னு
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன்
வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள பிரான்
அனமார் வயல்திங்க ளூரினில் வேதியன் அப்பூதியே"

என்று அப்பூதிரியார் அடைந்த பேற்றினைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

'நமசிவாய' எனும் ஐந்தெழுத்துப் பொருளாய் விளங்குகின்ற சிவபெருமான் திருவாக்கால் அருளிய திருவைந்தெழுத்து 'நாவுக்கரசு' என்னும் திருநாமம். ஆகவே அப்பூதியார் திருவைந்தெழுத்தினும் சிறந்த நாமமாக 'நாவுக்கரசு' எனும் நாமத்தைக் கொண்டார். சிவனடியாரைச் சிவமாகவே கொண்டார், தம் மகன் இழப்பினை விட சிவனடியார் அமுதுண்ணாது செல்லும் இழப்பினைப் பெரிதாக எண்ணினார். மகன் உயிர்பெற்றெழுந்த காலத்

தும் அதற்காக மகிழாமல் அடியார் உணவு உண்ணக் காலம் தாழ்க்கக் காரணமாயினனே என வருந்தினர். அடியார்பால் அப்பூதி மட்டுமா அன்பு செலுத்தினர்? மனைவியார் மக்கள் யாவருமே அன்பு செலுத்தினாரன்றோ! என்னே அப்பூதியார் மனமாண்பு! அப்பூதியார் வாழ் நாள் முழுதும் திருநாவுக்கரசெனும் திருநாமம் உச்சரித்தே வீடுபேறடைந்தார். இவ்வழிபாட்டினைச் சிறப்பித்துச் சிவப்பிரகாசர் தம் நால்வர் நான்மணி மாலையுள்

> 'உற்றா னலன்றவம் தீயில்நின் றானலன் ஊன்புனலா
> அற்றான் அலன்,நுகர் வும்திரு நாவுக் கரசெனும்ஓர்
> சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பிலபதம்
> பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே'

என்று பாடுகின்றாரெனின் 'திருநாவுக்கரசு' என்னும் திருநாமத்தின் சிறப்புத்தான் என்னே! அப்பூதியாரின் அன்பின் திறம்தாம் என்னே!

"இரண்டுமிலி"

(புலவர் மா. வேங்கடேசன், காஞ்சிபுரம்.)

உலகில் தனிப்பெருஞ் சமயமாக விளங்குவது சைவ சமயம். அது பிறசமயங்கள் எல்லாவற்றையும் தன்னுள் ளடக்கிக் கொண்டு மிளிரும் தாய்ச்சமயமாகும். "சைவத்தின் மேற் சமயம் வேறிலையதிற் சார்சிவமாம் தெய்வத்தின் மேற் றெய்வமில்லை" என்பது வேத வாக்கியம். அத்தகு மேன்மை கொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்குவதற்கே நால்வர் பெருமக்கள் அவதரித்தனர். "சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும், சிற்கோல வாதவூர்த் தேசிகனும் முற்கோலி வந்தமையாற்றான் 'சைவம்' இன்றும் நம்மிடையே வாழ்கின்றது. நாமெல்லாம் சைவர் என்று பெருமையுடன் வாழ்கின்றோம். உலகமும் இன்று சைவத்தை நாடி வருகின்றது.

இவ்வாறு சைவம் தழைத் தோங்க அருட்பணி புரிந்த பெருமக்கள் நால்வருள் 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்று கூறி அவனை நினைந்து அழுது அழுது, அவனருளாலே அவனடி யடைந்த அருளாளர் நம் மணி வாசகப் பெருமான். அப்பெருமானிடத்தில் நாம் காணும் தனிப்பெருஞ் சிறப்பு யாதெனின், இசையெல்லாம் இறைவனுக் காக்கி, வசையெல்லாம் தமக்காக்கிக் கொண்ட தன்மையே யாகும்! இதனை,

''இழித்தனன் என்னை யானே! எம்பிரான் போற்றி! போற்றி!
பழித்திலேன் உன்னை, என்னை ஆளுடைப் பாதம் போற்றி!''

என்று அவரே அருள்வதினின்றும் நன்கு அறிகின்றோம்.

இறைவனைப் புகழ்ந்தும், தம்மை யிகழ்ந்தும் வாழ்ந்த அவர் இறைவனைப் போற்றும் வகையினையும், தம்மை யிகழும் முறையினையும் அவரருளிய திருப்பாடல் ஒவ் வொன்றும் உணர்த்தும், சான்றாக இங்கு ஒரு திருப் பாடலைக் காண்போம் :-

''சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை யாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனியனேற்கே''

—திருவாசகம் : சதகம் : 26

இவ்வருட்பாடலில் இறைவனின் பெருமையையும் தம் முடைய சிறுமையையும் மணிவாசகர் விளக்கமாகக் காட்டு கின்றார். இறைவன் எல்லாராலும் விரும்பப்படும் இனிமை யுடையவன் என்பது தோன்ற அவனை, ''மால் அமுதப் பெருங்கடலே!'' என்று விளக்குகின்றார். 'அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளம்தரும் வண்மையும்' மலையின் இயல்புகளாம். அதனைப் போன்றே வன்மை, வண்மை, மேன்மை முதலிய எல்லாவற்றாலும் இறைவன் உயர்ந்தவன் என்பதைக்காட்ட

இறைவனை, மலையே' என்று போற்றுகின்றார். "செந் தாமரைக் காடனைய மேனித் தனிச் சுடரே!" என்பதன் மூலம் சிவபெருமான் சிவந்த அழகிய வடிவினையுடையவன் என்றும், ஆதாரமின்றியே பிரகாசிக்கும் அருட்பெருஞ்சோதி யானவன் என்றும் அவனுடைய திருமேனி யழகை விளக்கு கின்றார். உலகம்' என்றால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்குவகை நிலங்களும் நினைவுக்கு வரும் (குறிஞ்சி, முல்லைகளின் திரிபே பாலை என்பது) இவ்வாறுள்ள நானில மெங்கும்-உலகெங்கும் நிறைந்தவன் இறைவன் என்பதை அவ்வந்நிலத்துப் பொருட்களைக் கூறுவதன் மூலம் குறிப்பிடுகின்றார். கடல், மலை, தாமரை, காடு என்பன முறையே நெய்தல், குறிஞ்சி, மருதம், முல்லை நிலங்களை நினைவு படுத்தும்

இங்ஙனம் இத்திருப்பாடலில், 'இறைவன் காட்சிக்கும் கருத்துக்கும் இனியவனாகி' எங்கும் நிறைந்துள்ள தன்மை யைக் கூறிப் புகழும் வாதவூரர், தம்மை 'இரண்டுமிலித் தனியனேன்' என்று இகழ்ந்துரைக்கின்றார்.

மணிவாசகர் தம்மை இகழ்ந்து கூறும் அத்தொடரில், ஒவ்வொரு மனிதனிடத்தும் அமைந்திருக்க வேண்டிய இயல் பான சிறப்புக்கள் 'இரண்டு' என்று குறிப்பிடுகின்றார். தாம் அத்தகைய 'இரண்டும் இல்லாதவர்' என்று கருதுவதால், தம்மைப் போன்று இழிந்தவர் வேறு எவரும் இல்லை' என்று முடிவு செய்கின்றார். அதனாற்றான் தம்மை 'இரண்டுமிலித் தனியனேன்' என்று இழித்துரைக்கின்றார்.

மக்கள் அனைவரிடத்தும் அமைந்திருக்க வேண்டியன வாக நூல்களுள் பலசிறப்புக்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் மணிவாசகர் குறிப்பிடும் இருபெருஞ் சிறப்புக்கள் எவையாக இருக்கும்? எல்லாச் சிறப்புக்களையும் ஆராய்ந்து பார்க்கின் அவை. ஒன்றில் ஒன்றாக அடக்கி இறுதியில் எல்லாம் அறிவாகிய பெருஞ்சிறப்பினுள் அடங்கி விடுவதைக் காணலாம். ஆகவே மக்கள் அடையத்தக்கத் தனிச்சிறப்பு 'அறிவு' என்னும் ஒன்றே எனலாம். அவ்வாறாயின் 'இரண்டு' என்று மணிவாசகர் கூறுவன யாவை?

மக்களுக்கு அறிவு இருவகையாக விளங்கும்; இயற்கை யாக விளக்க முறுவது ஒருவகை. ஆன்றவிந்தடங்கிய சான்றோர்தம் மரபில் தோன்றும் ஒருவனுக்கு இயற்கை யாகவே அறிவு விளக்கமுறுவதை இன்றும் காண்கின்றோம். 'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' என்பர். இளைஞனை கரிகால் வளவன் நரை முடித்து முறைசெய்த வரலாறு இதற்குச் சான்றாகும். கள்ளி வயிற்றில் அகில பிறக்கும்' என்பதைப் போல அறிஞரல்லாதார் மரபிலேயும் கூட அறிவுடைய மகன் ஒருவன் தோன்றக்கூடும். இது அவன் நல்வினைப் பயனாக இறைவன் அவனுக்கு அருள்வது. இவ் வாறு மக்கள் இயற்கையாகப் பெறும் அறிவை நுண்ணறிவு (Inteligence) என்பர்.

இனி, செயற்கையாக அறிவு விளக்கமுறுவது மற்றொரு வகை கற்றல், கேட்டல் ஆகியவற்றால் ஒருவனுக்கு விளங்குவது. கற்றலின் மூலம் அறிவு பெருகும்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

என்பது வள்ளுவர் வாக்கு. இங்ஙனம் கற்பதுடன், வல்லார் வாய்க கேட்டும் அறிவது மிக்க சிறப்புடையதாகும். கற்றறியும் வாய்ப்பிலாதார்க்கும் கேட்டல் மூலம் எளிதாகவும் தெளிவாகவும் அறிவு விளங்கும் அதனாற்றான் 'கற்றலின கேட்டலே நன்று' என்று கேள்விச் செல்வம் போற்றப் படுகின்றது இவ்வாறு கற்பதாலும், கற்றறிந்தோர் சொல்லக் கேட்பதாலும் உண்டாகும் அறிவை நூலறிவு (Knowledge) என்பர்.

எனவே இயற்கையாக விளங்கும் நுண்ணறிவும் செயற்கையாகத் தோன்றும் நூலறிவும் மககளிடம் அமைந் திருக்க வேண்டிய பெருஞ்சிறப்புக்களாம் உலகில் மக்கள் அடையத்தக்க பிறசிறப்புக்களுக்கெல்லாம் இவ்விரண்டும் காரணமாக விருப்பனவாதலின் மக்களாகப் பிறந்தார்க்கு இவை பெருஞ்சிறப்புக்களாக மதிக்கப் படுகின்றன. வள்ளுவப் பெருந்தகையும்,

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை"

என்று இவற்றின் பெருமையை எடுத்துரைக்கின்றார். 'மதிநுட்பம்', நூல்' எனப்படும் இரண்டும் முறையே 'நுண்ணறிவு', நூலறிவு என்று விளக்கப்படுகின்றன. நுண்ணறிவு இயற்கையானது என்றும் அது தெய்வம் தரப் பெறப் படுவது என்றும், நூலறிவு செயற்கையாகத் தோன்றுவது என்றும் அவ்விரண்டனைப் பற்றியும் மேலும் விளக்கம் தருகிறார் பரிமேலழகர். அத்தகைய இருவகையான அறிவுகளையும் உடையவர்க்கு உலகில் 'அரியது' என்று ஒன்றுமில்லை என்று வள்ளுவர் உறுதியாக நம்புகின்றார் என்றால் மேலும் அவற்றின் மேன்மையை விளக்க வேண்டுவ தில்லை.

ஆகவே, 'இரண்டுமிலித் தனியனேன்' என்ற தொடரில் மணிவாசகர் குறிப்பிடுவன, நுண்ணறிவும் நூலறிவுமாகிய இரண்டுமேயாகும் என்பதை நன்கறியலாம்.

இனி, இதற்கு இவ்வாறின்றி வேறுபல வகையாகப் பொருள் கூறுவாரும் உளர். அவருட்சிலர் 'வினையிரண்டு மில்லாதவன்' என்றும், 'இன்பத் துன்ப மற்றவன்' என்றும் அடிகள் தம்மைக் குறிப்பிடுவதாகக் கூறுவர். அவ்வாறாயின் அடிகள் தம்மைத் தாமே புகழ்வதாக முடியும். வினையின் நீங்குதலும், அதன்பயனாக இன்பத் துன்பம் அறுதலும் சீவன் முத்தர்களிடத்தே காணப்படும் தன்மைகளாகும். தன்னை ஓரிடத்தும் உயர்த்திக் கூறாத மணிவாசகப் பெருமான் இங்குச் சீவன் முத்தர்களுள் ஒருவராகத் தம்மைக்குறிப்பிடுகிறார் என்பது முற்றிலும் பொருந்தாது.

'இம்மைப் பயனும் மறுமைப் பயனுமாகிய இரண்டினையும் இழந்தவராகத் தம்மைக் கருதியே அவ்வாறு கூறியுள்ளார்' என்பது வேறுசிலர் கருத்து இம்மைப் பயனாகவுள்ளது புகழ். இம்மை வாழ்வாகிய இல்வாழ்க்கையை மேற்கொண்டவர் அதன் பயனாக அடையத்தக்கது புகழ் அது கருதியே திருவள்ளுவரும் இல்லறவியலின் இறுதி அதிகாரமாகப் புகழை வைத்துள்ளார். அப்புகழல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை என்பதும் அதனாலேயாம். இத்தகு புகழ் இல்லற வாழ்வில் ஒருவன் ஆற்றும் அருஞ்செயல்களாகிய கல்வி, வீரம், கொடை முதலியவற்றால் அடையத்தக்கது.

இனி, மறுமைப் பயன் எனப்படுவது போகமாகும்! அது இம்மை வாழ்வில் ஒருவன் செய்யும் புண்ணியத்தின் பயனாகத் துய்க்கப்படுவது. ஆகவே இம்மைப் பயனாகிய புகழும், மறுமைப் பயனாகிய போகமும் முறையே அருஞ்செயல்களாலும், அறச் செயல்களாலும் ஒருவன் அடைவனவாம்.

நன்மை தீமைகளை ஆராய்ந்தறியும் அறிவுடையார் செயற்கரிய செய்தலின் மேன்மையையும், அறச் செயல்களின் சிறப்பினையும் நன்குணர்ந்து அவற்றைத் தம்வாழ்வில் கடைப்பிடிப்பர். அதனால் புகழும் போகமும் எய்துவர். ஆனால், அத்தகைய அறிவில்லாதவர் அவ்விரண்டனையும் இம்மை, மறுமைப் பயன்களையும் இழப்பர். எனவே, அறிவு இழந்தவராக அடிகள் தம்மைக் கருதுவதன் மூலம் மேற் குறிப்பிட்ட அவ்விருபயன்களையும் இழந்தவராகவே தம்மை மதிக்கின்றாராதலின் தாம் இழந்தன வாகக் கூறுவன அவ்விரு வகையறிவுகளையுமே என்பதை நன்கு உணரலாம்.

இனி, 'இரண்டுமிலித் தனியனேன்' என்னும் அத் தொடர்க்குச் சிலர் தத்துவார்த்தமாகப் பொருளுரைப்பர்.

'சத்தும் அசத்துமாகிய இரண்டு மில்லாத தனித்தன்மை யுடையவன்' என்று அடிகள் தம்மைக் குறிப்பிடுகிறார் என்று கூறுவர். சத்தும் ஆகாமல் அசத்துமாகாமல் தனித் தன்மை யுடையவாதல் உயிர்களின் பொதுத் தன்மையாகும். இதனை, உயிருண்மையை நிலைநாட்டும் சிவஞானபோதம் மூன்றாம் சூத்திரத்து முதல் அதிகரணச் செய்யுள்,

"அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றென் றுளத்துவே றியனைத்தும்—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி"

என்று கூறுகின்றது. உயிர் மாயாகாரியங்களாகிய நிலம் முதலியவற்றைக் கருவிகளாகக் கொண்டு அறிவதாகலின் அது மாயையாகிய அசத்தினின்றும் வேறுபட்ட ஒன்றாகும். மேலும், அது மாயாசம்பந்தமுடைய தாகலின், இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கிய இறைவனாகிய சத்தினின்றும் வேறு பட்டதும் ஆகும். ஆகவே உயிர்

சத்தும் அன்று; அசத்தும் அன்று; தனி! அதாவது சதசத்து. உயிர்களின் உண்மைததன்மையை மேற்காட்டிய செய்யுள் இவ்வாறு உணர்த்துகின்றது.

எவ்வளவு இகழ முடியுமோ, அவ்வளவு தம்மை இகழ்ந் துரைப்பதில் இன்பம் காண்பவர் மணிவாசகப் பெருமான். தம்மைப் பற்றிக் கூறும் எல்லாவிடங்களிலும் அவர் இம் முறையையே கடைப்பிடித்து வருவதை அவரை அறிந்தவர் கள் நன்கு அறிவர், இத்தகுவியல்புடைய அடிகள் இங்கு மட்டும் 'எல்லாவுயிர்கட்கும் பொதுவான இயல்பைக் குறிப் பிட்டுச் சத்துமாகாமல் அசத்து மாகாமல் சதசத்தாகவுள்ள தன்மையைக்கூறி தமக்கோரிழிவு தோன்ருத வகையிற் கூறினுர்' என்று கொள்வது அவர்தம் மனவியல்புக்கு மாருனதாகும்.

இதுகாறும் கூறியவற்ருல், 'இரண்டுமிலித் தனியனேன்' என்ற தொடரில் 'நுண்ணறிவும்' நூலறிவும் இல்லாதவன்' என்றே அடிகள் தம்மைக் குறுப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகும்.

மேலும், அடிகள் உலகியலோடு ஒன்றிய முறையிலேயே தம்மைப் பெரும்பாலும் பழித்துரைப்பது குறிப்பிடத் தக்கது. பழியுடைய ஒவருனேயும், குணம், அறிவு முதலியவற்ருல் இழிந்த ஒருவனேயும் உலகோர் நாய் பேய், நீசன், பொய்யன், பாவி என்றெல்லாம் பழித்துரைப்பர். அத்தகைய இகழுரை களுள் இரண்டுங்கெட்டான்' என்பதும் ஒன்று. நனமை, தீமையறியும் அறிவில்லாத ஒருவனே 'இரண்டுங்கெட்டான்' என்று கூறுவர். 'இரண்டுங்கெட்டான்' என்பதற்குச் சுயபுத்தியும் (நுண்ணறிவும்) சொல்புத்தியும் (நூலறிவும்) ஆகிய இரண்டு மற்றவன் என்பதே பொருள்.

பழிகாரர்களே இழித்துரைக்க உலகோர் பயன்படுத்தும் மணிவாசகர், 'இரண்டுங்கெட்டான்' என்னும் பழிச்சொல் லேயும் அவ்வாறே பயன்படுத்துகின்ருர். 'இரண்டுமிலித் தனியனேன்' என்று அவர் கூறுவதன் முலம் இயற்கை யான நுண்ணறிவோடு செயற்கையான நூலறிவுமில்லாத (எனக்கு, என்னேத்தவிர வேருெருவர் ஒப்பாகார் ஆகையால்)

தனித்தன்மை யுடையவன்" என்றே தம்மைக்கருதுகிறார். 'இரண்டுங்கெட்டான்' என்று உலகோரால் பழிக்கத்தக்க ஒருவன் இரங்கத்தக்கவனாக இருத்தலை அறிந்த அடிகள் தம்மையும் அத்தகைய பரிதாபத்துக்குரியவராக எண்ணுகின்றார். எண்ணவே, அவ்வாறே தம்மையும் கூறிக்கொள்ள ஆசைப்பட்டு 'இரண்டுங்கெட்டான்' என்ற பொருளில், 'இரண்டு மிலித் தனியனேன்' என்றுரைத்துள்ளார். மணிவாசகப் பெருந்தகையின் மனநிலையை உள்ளவாறு உணர்வோர் இவ்வாறன்றி இத்தொடருக்கு வேறுவகையாகப் பொருள் கொள்ளார்.

ஆகவே அறிவாற் சிவனாக அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் மணிவாசகப் பெருமான், பணியுமாம் என்றும் பெருமை" என்று வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கோர் இலக்கியமாக வாழ்ந்த சிறப்பினையுன்னி, அவர்தம் நெறி போற்றிக் கற்றடங்கி வாழ்வோமாக!

வாழ்க! வாதவூரடிகள் தம் பொற்றாள்!

சைவத்தின் சீர்மை.

(வித்துவான். வெள்ளேரி. வேலாயுதம்)

1. முன்னுரை: சைவம் சிவ சம்பந்தம் உடையது. சிவம்—முழுமுதற்கடவுள்—அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாயுளது — சருவசத்திமான். "அரிகரும் பிரமற்கு மல்லாத தேவர்கட்கும் தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம்" இச்சிவத்தோடு சம்பந்தம் உடையதே சைவ சமயம்.

ஒருவர் யாம் சைவர் எனின், புலால் உண்ணா ஒழுக்கத்தவர் என்ற பொருளிலும அச்சொல் ஆட்சியுறுகின்றது. வைணவம், புத்தம், சமணம், சிறித்தவம், இசலாம் முதலிய சமயப் பெயர்கள் இப்பொருள்குறியா. எனவே அவரெல்லாம் புலால் உண்ணும் ஒழுக்கந்தினை நீங்காதவருமாவர்.

"அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா னிடரெல்லா மிப்புற் றிருக்கின்ருர்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்னிற் புசித்தவர்க்கென்
சொல்வதே"

எனவரும் பஞ்சாட்சரப் பதிபசுபாச விளக்கத்திற் பாச விளக்கம உசு-வது தூக்கு புலாலுண்ணலின் புன்மையை விளக்கும்.

2. சமய சமரசம்: "சைல முதலாமளவில் சமயமும் வகுத்து" என்ருர் தாயுமானவர். முதலாம் என்பது எல்லாச் சமயங்கட்கும் தலையாயது மேலாயது என்றும். என்னை? "மேறசமயங்கடந்தமோன சமரசம் வகுத்தநீ" என்று அப்பெருமானுர் அருளிய நிலையிற் செலுத்துவது இச்சைவ சமயம் ஒன்றேயாதலின். என்னை? ஸ்ரீமத பாம்பன் சுவாமிகளும் "எத்தனை சாத்திரத்தை யெத்தனைநாள் ஓர்ந் தாலும் அத்துவிதங் காண்டலரிது பரஞ்சோதி" என அருளியுள்ளமை காண்க.

"செய்வினையும் செய்வானு மதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்
எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள்சிவன்என் றருளாலே
உணர்ந்தறிந்தார்"

—பெரியபுரா–சாக்கிய நாயனுர்.

என்றருளியுள்ளார் அருண்மொழித் தேவர். சைவ நெறிக்கண், செய்வான், செய்வினை, செயற்பயன், பயனை நுகர்விப்போன் ஆய நாற்பொருளும் இன்றியமையாதன. ஆனல் பிறசமயங்களில் ஓரிரண்டு குறைபாடுடைய. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை யறிந்து, சிவனடிசேர்ந்து பேரானந்தமாகிய சிவானந்தத்தில் வாழ்வதே முத்தி என வகுத்துரைப்பது சைவம்.

எது உண்மைச் சமயம்? உண்மைப் பொருளை யுணர்த்தும் நூல்களும் சமயங்களும் ஒன்றோடொன்று பொருந்தாது மாறுபாடு கொண்டு இலங்குகின்றன. அவற்றுள் எது உண்மைப் பொருள்? எது உண்மைச் சமயம் என்பதை ஆய்தல் நலனே. 'இது ஆகும்', 'இது ஆகாது' எனும் பிணக்கு நீக்கி நீதியின்படி இவையெல்லாம் ஓரிடத்தில் காணுமாறு நிற்பதுயாதோ அதுவே உண்மைச் சமயத்தின் உண்மைப் பொருள். அதாவது எல்லாவற்றையும் அவ்வவற்றிற்கேற்ற முறையில் வைத்து நோக்குதலேயாம். இதுதான் சைவசமய சமரசமாகும். இக்கருத்தை

'ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருணூல்
ஆதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
அடங்கியிடு மவையிரண்டு மரனடிக் கீழடங்கும்
(சித்தி-சூத்-அ)

என்று சிவஞான சித்தியார் விளக்குகிறது.

3. சைவ சமயச் சிறப்பு: பாந்த கொள்கை தேவை! எல்லாம் ஒன்றுதான்! சமயங்களுள் வேறுபாடே கூடாது—எனப் பறை சாற்றலாம். அது எளிது. ஆயின் சமயங்களுள் கடவுட் கொள்கையும் முத்தியிலக்கணமும் மாறுபாடுடையனவே.

எடுத்துக்காட்டாக, சைவசமயக் கோட்பாட்டின் படி ஒருயிர் மற்றொருயிராய்ப் பரிணமிக்கும். கிறித்துவ சமயத்தின்படி அவ்வாறு அஃது பரிணமியாது.

சைவ சமயத்தின் படி உயிர் பல பிறவிகள் எடுத்துக் கடவுளிடம் சேரத்தன்னைப் பக்குவப் படுத்துகிறான். கடவுளை அடையும் வரை அவனுக்கு ஓய்வில்லை. கடவுள் எண்ணிறந்த அண்டங்களை உண்டு பண்ணினர். ஒவ்வொரு

கணப்பொழுதும் இறைவன் பக்குவ மடைந்த உயிருக்கு மோட்சம் வழங்குகின்றான்.

கிறித்துவப்படி மனிதனுக்கு ஒரு பிறவிதான் உண்டு. இப் பிறவியில் தேவகுமாரனைத் தான் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் பேராபத்துக்குள்ளா கிறான். கடவுள் இந்த மண்ணுலகம் ஒனறைத்தான் படைத்தார். பிறகு இதன் நன்மைக்காக சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியனவந்தமைந்தன.

இதுபோன்றே சமயங்களுக்குள் பல கொள்கை வேறு பாடுகள்உள. இவ்வாறு பலவேறுபாடுகள் இருக்கும் போது எல்லாம் ஒன்றெனல் பொருந்தாதாகி விடுகிறது. எதுபோல எனில்,

ஓர் மருத்துவர் தன்பால் வரும் பிணியாளரை வேறு பாடின்றி ஒன்றுபோல் பாவித்தல் என்பது முறைதான். ஆயின் எல்லாப் பிணியாளருக்கும் ஒரே விதமான சிகிச்சை யையும் மருந்தையும் தரவேண்டும் என்பது பொருந்துமா?

இல்லத் தலைவி தன் வீட்டில் உள்ளவர்களையும் வருபவர்களையும் வேறுபாடின்றி ஒன்றுபோல் உபசரித்தல் முறை—ஆனல் எல்லோரையும் தன கணவனைப் போன்றே கவனித்தல் என்பது எங்ஙனம் பொருந்தும்? பொருந்ாது.

நம் பாம்பன் சுவாமிகள் திட்பத்தில் கூறியதும் ஈண்டு தருவாம்.

“நம்மையும் பிறரையும் யாவையும் படைத்த நவைதபு தெய்வமொன்றேயுளது. இழிவு, சிறப்பெடுத்திசைத்து நம்மிற்றெய்வவாதம் புரிதலெற்றுக்கு? அஃதறியாமை யாய் முடியுமாகலின் வாதம் நீத்து. ஒற்றுமையுடனுய்யக் கடவோம்” என்னும் உரைகளெழுபபிக் கோடல் நறிய சமாதானத்தை நல்குகின்றதே. ஈங்குச் சிவமூர்த்தி வழிபாடொன்றனையே விதந்து கோடல் சாலுமோ? எனின் – தடை தணந்த கிருபாமார்க்க மாதலிற் சாலு

மென்பதற்குரிய ஏதுமேற்கோள் பலவும் மேலே வந்துள் ளன. குழுவினர் கிளத்து சமாதானம், தெய்வத்தின் சொரூப நிலை ஒன்றற்கே யாவதல்லது. தடத்திற்காவ தன்று......... ஆத்திக ரனைவர்க்கும் முற்றும் பொது வாகாத அச்சமாதானம், பன்மதச் சண்டையிலுறு பகைமை, உவர்ப்புக்களை யொழித்து உலக நடையிற் சீவனஞ் செய்திருத்தற்குத் தேடிக் கொள்ளுமோரு பாயமாகவே யெண்ணப்படும். இவ்வுபாயம் நுதலிப் பொதுமை புகன்றுகொள்வாருள் முகம்மதியர் தொழூஉம் ஆலயத்திற் கிறிஸ்தவரும், கிறிஸ்தவர் தொழூஉம் ஆலயத் தின் முகம்மதியருந் தொழக் காண்பதின்று. அங்ஙனமே, சைவர், வைணவர், பிறர் செய்கையுமாம். முகம்மதியரு டைய முண்டிதமுங் குறியுரி விடுவாய் செய்தலும் ஏனையர் செய்யாராகலின் அவர்க்கு முகம்மது மத வழிபாடுதான் யாங்ஙனங் கூடும்? ஏனையுவுமன்ன. இவ்வேதுக்களானே அவரெல்லாங் குழூமிக் குயிலும் அவ்வொற்றுமை போலியே யென்றற்கு இழுக்கென்னை? இனறே. இப் போலிக்கண் வைகினருள் முகம்மதியர் தம திருக்கையினை யடைதலுந் தங்கடவுள் காரியத்தே கருத்தாகித் தமது மதாசாரத்தையே அனுட்டிப்பர். அங்ஙனமே கிறிஸ்து வருமுளுற்றவர். பிறருமுளுற்றுவர். இச்செய்கை சால்பு டைமையே. இதனை எஞ்சிந்தை பெரிதும் மதிக்கின்றது" என வருவதும் உணர்க.

ஆய்ந்து நோக்கின் குறைபாடிலாக் கொள்கையுடைய சமயம் சைவம். எக்காலத்தும் பிற சமயங்கள் சைவத்திற்கு அழிவு செய்யும்போது அதைத் தடுத்து நிறுத்துதற்குரிய வலிமை இதன்பால் இயல்பாகவே அமைந்துளது.

சைவம் எச்சமயத்தையும் பகைத்துக் கொள்ளாது. அழிவு செய்யாது; அன்றும் இன்றும் நின்ற நிலையான கொள்கை இதுதான்.

அன்று வாகீசர் சைவத்தை விடுத்துச் சமணம் புகுந் தார், சைவம் அவருக்கு எத்தகைய இன்னலும் விளைவித்த

தில்லை. அவர் அப்புறச் சமயத்தை விட்டு மீண்டும் சைவம் புகுந்தார். அவருக்கு அப்போது சமணம் பல கொடுமைகளைச் செய்தது.

இதற்கு மறுப்பாக 'சைனர்களைக் கழுவேற்றினர்களே:— எனின் 'கழுவேற்றினர்கள்' என்பதில்லை. ஏறினர்கள்' என்றே சான்றுளது என்க.

சைவர் அகச் சமயம் புகுந்து—வேதாந்தம் உணர்ந்து—சைவத்திறம் பெற்று சரியை-கிரியை யோகம் முற்றிய சிவஞானத்தினாலே சிவனடி பெறுவரா? என்றால் பெறுவர் என்க. அதற்குச் சைவ சமயக் கோட்பாடுகளை யுணர்ந்த பெரியோர்கள் எளிய தமிழ் நடையில் இனிமையான சிறு சிறு நூல்களை இயற்றல் வேண்டும். சைவப் பற்றுடைய தாழ்விலாச் செல்வர் நூல்களை வெளியிட, மதப் பிரசாரம் செய்திடப் பொருளுதவி செய்திடல் வேண்டும். நூல்களைக்காசு பெறாது அனைவருக்கும் ஈதல் வேண்டும். சைவ சமயம் கொல்லா நோன்பது; அன்பு வழித்தது என்பதைப் பரப்பிட இறையருள் பெறவே இனிதாய் அனைவரும் நல்லறம் புரிதல் வேண்டும்.

நிலவு மெய்ந் நெறியாம் சிவநெறி தமிழகத்தில் புத்துயிர் பெற்றுத் திகழட்டும் – பின் அது திக்கெட்டும் பரவட்டும்.

"மேன்மை கொள் சைவ நீதி ஓங்குக"

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் திரு. P. K. நடராஜன் அவர்கள் தங்கை மகள் திருமதி கோகிலாவுக்கும் கோபி, G. N பக்கிரிசாமி அவர்களுக்கும், தங்கை மகன் திரு. K. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும் திருமதி S. வசந்தாவுக்கும், அண்ணர் மகள் திருமதி இராஜேஸ்வரிக்கும் திரு K. R. நாகராஜன் அவர்களுக்கும் திருமணங்கள் 4-6-69 அன்று கோபிசெட்டிபாளையத்தில் முறையே காலை 7 மணிக்குள்ளும் 10 மணிக்குள்ளும் 10-45 மணிக்குள்ளும் சிறப்புற நிகழ்ந்தன.

புது மணமக்கள் திருச்செந்திலாதிபன் திருவருளால் எல்லா நன்னலங்களும் பெற்று நீடுவாழ அருள் புரிய அவன் கழலிணைகளையே இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

ஆனித் திங்கள் சிறப்பு நாள்கள்

6 (20—6—69) மகம்—மாணிக்கவாசக சுவாமிகள் விழா
7 (21—6—69) பூரம்—அமர்நீதி நாயனுர் விழா
23 (7—7—69) இரேவதி—ஏயர்கோன் கலிக்காம நாயனுர் விழா

4-5-69 முதல் 6-5-69 வரையில் கும்பகோண மடத்தின் பிரச்சார மண்டபத்தில் சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சாத்தக்கூடல் ஔவை தபோவனம் அமுத மொழி திரு. சோ. சாமிசாதப் பிள்ளை அவர்களால் ஔவையார் அருளிச்செய்த ஆத்திச்சூடி வகுப்பு நடத்தப்பட்டது. 50 மாணவ, மாணவிகளும் பெரியவர்களும் வகுப்பில் கலந்து கொண்டார்கள். சென்னை தமிழ்நாடு தெய்வீகப் பேரவையாரின் ஆத்திச்சூடி இலவச வெளியீடு வழங்கப் பட்டது. ஆத்திச்சூடி 108 செய்யுட்களையும் மனப்பாடம் செய்து பிழையில்லாமல் ஒப்புவிக்கும் மாணவ மாணவிகளுக்கு 1-6-69ல் பரிசுகள் வழங்குவதென்ற முடிவைத் தெரிவித்து இந்த வகுப்பு நடத்துவதற்குப் பொருள் உதவிய கும்பகோணம் கன்னையா போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் திரு. கே. கன்னையா நாயுடு அவர்களுக்கும் பரிசுகள் வழங்குவதற்குப் பொருளுதவிய மஞ்சக்கொல்லை திரு. டி. என். சுவாமிநாத முதலியார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை விழா 10-5-69 ஆம் நாள் நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலையில் சிறப்புற நிகழ்ந்தது.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் 10-5-69ல் திருநாவுக்கரசர் விழாவும் 22-5-69ல் சேக்கிழார் பெருமான் திருவிழாவும் 2-6-69 ஆம் நாள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் திருவிழாவும் சிறப்புற நிகழ்ந்தன.

குன்றத்தூர் சேக்கிழார் கழகத்தின் 28ஆம் ஆண்டு விழா 12-5-69 முதல் 21-5 69 முடிய சிறப்புற நிகழ்ந்தது. தினமும் மாலையில் பெரிய புராணச் சொற்பொழிவுகள் பல புலவர் பெருமக்களால் நிகழ்த்தப்பெற்றன. மேலும் காலை 9-12 வரையிலும் மாலை 3-6 வரையிலும் பெரிய புராண வகுப்பு காஞ்சிப் பெரும்புலவர் பொனசண்முகனூர் அவர்களால் தினமும் நடத்தப்பெற்றது. பலபுலவர்களும் தமிழறிஞர்களும் வகுப்பில் கலந்துகொண்டனர்.

சேக்கிழார் சுவாமிகள் பெருந்திருவிழாவும் 11-5-69 முதல் 22-5-69 முடிய மிகச் சிறப்புற நிகழ்ந்தது. 22-5-69ல் திருமுறை விழாவும் நிகழ்ந்தது.

19-5-69 அன்று குன்றத்தூர் முருகன் கோவிலில் படி விழா சிறப்புற நிகழ்ந்தது. சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தினர் கலந்துகொண்டனர்.

மஞ்சக்கொல்லை திருஞானசம்பந்த சபையின் ஆதரவில் சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்பு 22-5-69 முதல் 2-6-69 முடிய நடைபெற்றது. திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் தினந்தோறும் காலையில் சிவஞான சித்தியார் சுபக்கத்தை நடத்தினார்கள். மாலையில் புலவர் பலர் திருஞான சம்பந்தர் வரலாற்றினைத் தொடர்சொற்பொழிவாக வாற்றினர்.

சேலம் மாவட்ட சமரச சன்மார்க்க சங்க ஐந்தாவது மாநாடும் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழாவும் 31-5-69, 1-6-69 நாளகளில் மிகச் சிறப்புற நிகழ்ந்தன. பல பெருமக்கள் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றினர்.

பூவாளூர் சைவ சித்தாந்த சங்க 59ஆவது ஆண்டு விழா 7-6-69, 8-6-69ஆம் நாள்களில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பல பெருமக்கள் சமயச் சொற்பொழிவாற்றினர்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.